# லட்சம் மக்கள் திரண்ட ஆர்ப்பாட்டப் பேரணி!

விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 7 இதழ் 9
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 19-2-1995

(யாழ்ப்பாணம்)
சிறிலங்கா அரசின் அசமந்தப் போக்கினைக் கண்டித்து யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் நேற்று காலை மாபெரும் கண்டனப் பேரணி ஒன்றை யாழ். நகரில் நடத்தியது. இக் கண்டனப் பேரணியில் லட்சம் மக்கள் அணிதிரண்டிருந்தனர்.

யாழ். பல்கலைக்கழக கலைப் பீட மைதானத்திலிருந்து நேற்றுக் காலை 10-30 மணிக்கு ஆரம்பமான இப்பேரணியில் யாழ், மாவட்டத்திலுள்ள பல்வேறு பொது அமைப்புகளும் பங்குபற்றின. கண்டனப் பேரணி இராமநாதன் வீதி, பலாலி வீதி, அரசடி வீதி, கோவில் வீதி வழியாக

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகள் - வாசுகுழு நேற்று சந்திப்பு

(யாழ்ப்பாணம்)
தென்பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் வருகை தந்த திரு. வாசுதேவ நாணயக்கார தலைமையிலான குழுவினர் நேற்றுக்காலை விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துபேச்சுக்களை நடத்தினர்.

தமிழீழ அரசியல் துறை செயலகத்தில் நேற்றுக் காலை 10 மணியளவில் இச்சந்திப்பு ஆரம்பமானது. சுமார் ஒரு மணி வரையும் இச்சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது தற்போதைய அரசியல் நிலை குறித்தும். சமாதானப் பேச்சுக்களில் விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு குறித்தும் விளக்கிக்

(1ம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்களின் அன்றாட பிரச்னையை தீர்க்காது பேச்சுக்கள் நடத்த முடியாது

## பேரணிக் கூட்டத்தில் வாசுதேவா உரை

[யாழ்ப்பாணம்]

**தமிழ்மக்களின் அன்றாடப் பிரச்னைகள் தீர்க்கப்படாமல் சமாதானப் பேச்சு வார்த்தைகள் நடத்தமுடியாது என்று சமாதானக் குழுத் தலைவர் திரு. வாசுதேவ நாணயக்காரா யாழ்.செயலக வளவில் ஆர்ப்பாட்டப்பேரணியின்பின் நேற்று கூடியிருந்த மக்கள் மத்தியில் உரையாற்றும்போது தெரிவித்தார்.**

யாழ் வந்த சமாதான க்குழுவை சேர்ந்த இரத்தினபுரி மாவட்ட எம் பியான திரு. வாசுதேவ நாணயக்கார நேற்று நண்பகல் யாழ்செயலகத்தை வந்தடைந்த வெகுஜன ஆர்ப்பாட்டத் பேரணியினர் கையளித்த மகஜரை பெற்றுக்கோண்ட பின்னர் அங்கு கூடியிருந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் மத்தியில் ஆங்கிலத்தில் உரையாற்றினார்.

வடக்கு-கிழக்கில் மீனவர்

(4ம் பக்கம் பார்க்க)

## வாசுகுழுவினர் இன்று புறப்படுவர்

(யாழ்ப்பாணம்)
யாழ் வந்த சமாதானக் குழுவினர் இன்று காலை 7 மணிக்கு தமது சமாதானப் பயணத்தை முடித்துக் கொண்டு புறபபடுவர்.

வெகுஜன அமைப்புகள் நேற்று நடாத்திய பேரணியில் கையளிக்கபபட்ட மகஜரையும் தமிழ் மக்களின் சமாதான செய்திகளையும் தமுடன்

(2ம் பக்கம் பார்க்க]

## தமிழ்மக்களின் கோரிக்கைகளை சந்திரிகாவிடம் தெரிவிப்போம்

– வை. பி. டி. சில்வா தகவல்

(யாழ்ப்பாணம்)
கொழும்பு சென்றதும் யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் வலியுறுத்திய விடயங்களையும் நேற்று நடைபெற்ற பேரணியில் வெகுஜன அமைப்புகள் விடுத்த கோரிக்கைகள் குறித்தும் ஜனதிபதி சந்திரிகாவிடம் தெரிவிக்கவுள்ளோம்.

இவ்வாறு யாழ்ப்பாணம் வந்த சமாதானக் குழுவினர் நேற்று இரவு நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டில். ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் 'வை பி. பிரிவுத் தலைவரும் பொ ச. மு. எம். பி. யுமான · திரு வை பி. டி. சில்வா தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்:

நேற்று நடைபெற்ற வெகுஜன அமைப்பு பேரணியின்போது தென்னிலங்கையிலிருந்த. நாம் கொண்டு வந்த செய்தியை வடபகுதி தமிழ் மக்களிடம் கொடுத்தோம் அதேபோல்பேரணியின்போது வெகுஜன அமைப்புக்கள்வழங்கிய மகஜரை கொழும்பு சென்றதும் ஜனதிபதியிடம் கையளிப்போம்,

மேலும் நாம் இங்கு விஜயம் செய்தபோது கேட்டவற்றையும் ஜனதிபதி சந்திரிகாவிடம் நேரில விளக்குவோம் நாம் இங்கு தமிழ் மக்களின் அபிலாஷைகளையும் கோரிக்கைகளையும் கிரகித்துக்கொண்டோம் இவற்றையெல்லாம்

(4-ம் பக்கம் பார்க்க)

## நிரந்தரத்தீர்வு காண்பதற்கு முதலில் சமாதானம் தேவை

– அமெரிக்க தூதுவர் தெரிவிப்பு

[கொழும்பு)
இலங்கை இனப்பிரச்னைக்கு நிரந்கர தீர்வு காண்பதற்கு முதலில் சமாதானம் ஏற்பட வேண்டும் சமாதானத்தை அடியொற்றி பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வுகாணப்பட வேண்டும் இவ்வாறு அமெரிக்க உயர் ஸ்தானிகர் பெசிற்ற

(2ம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தால் ஏற்பட்ட அழிவை இங்கு நேரில் பார்த்தோம்

– பேராசிரியர் உயாங்கொட

(யாழ்ப்பாணம்)
யுத்தத்தின் கொடுமையால் யாழ்ப்பாணம் எவ்வளவு தூரம் சீரழிந்துள்ளதென்பதை இந்த விஜயத்தின்போது எம்மால் நேரில் பார்க்கக்கூடியதாக இருந்தது. கடந்த 24 மணி நேரங்கள்தான் நாம் யாழ்ப்பாணத்தில் இருந்தோம். ஆகவே யாழ்ப்பாணத்தின் சிதைவுகளையும், சீரழிவுகளையும் சிறிய அளவில் காணக்கூடியதாயிருந்தது. இந்த மக்கள் கடந்த பல வருடங்களாக எவ்வளவு தூரம் துன்ப துயரங்களை அனுபவித்தார்கள் என்பதை புரிந்துகொள்ள இது போதுமானதாகும்.

இவ்வாறு நேற்றிரவு சமா

(2ம் பக்கம் பார்க்க)

## அடுத்த மாத முற்பகுதியில் நாலாம் கட்டப் பேச்சுக்கள்

– கேணல் ரத்வத்த தெரிவிப்பு

(கொழும்பு)
நான்காவது சுற்றுப்பேச்சு வார்த்தை மார்ச் மாதத்திற்கு முன்னர் நடைபெறும் என்று பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருதத ரத்வத்த தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலே அவர் இவ்வாறு கூறினார்.

அமைச்சர் ரத்வத்த மேலும் அங்கு தெரிவிக்கையில்,

மூன்றும் கட்டப் பேச்சுவார்த்தையின் பின்னர் புலிகளுக்கும் எமக்கும் இடையே பல கடித பரிமாற்றங்கள் நடைபெற்றுள்ளன.

மார்ச் மாதம் 1-ந் திகதியிலிருந்து வடபகுதி அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்படும். அடுத்த கட்ட பேச்சுக்களில் பாதை திறப்பு, நெடுஞ்சாலை திருத்தம், மின்சாரம் வழங்குதல் போன்றவை பற்றியே

(4ம் பக்கம் பார்க்க)

## அடுத்த வாரம் மீண்டும் பேச்சுகள்?

— பலபத்தபெண்டி

(கொழும்பு)
அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் அடுத்த வாரம் நடைபெறும் என்று ஜனதிபதியின் செயலாளர் திரு. கே. பலபத்தபெண்டி தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது;

வடபகுதிக்கான பாதை திறப்பு விவகாரத்தில் இரு

(4-ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

25-3-95 வரை
செவ்வாய் வக்கிரம்

புத்தாண்டுப்பலன்கள் ரூபா 10/- எங்கும் கிடைக்கும் கைரேகை, எண்ஜோதிடம், விவாகப் பொருத்தங்கள், ஜாதகங்கள் பார்வையிட நேரிலே சந்திக்கலாம். 'சத்யா' (இடிகுண்டருகே) கட்டுடை. (சி- 1400)

MATHS

புலமைப் பரிசில் வகுப்பிலிருந்து O/L வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும், இதுவரை சித்திப் புள்ளியடையாதவர்களுக்கும் 28 வருட அநுபவம் உடைய ஆசிரியரினுல் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும. ஆறுமுகநாதன் 10 கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டுகுளி. (சி 1398)


## உடற்பயிற்சி போட்டி

(யாழ்ப்பாணம்)

''கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுக் கிடையிலான உடற்பயிற்சிப் போட்டி புத்தூர் சோமாஸ்கந்தாக்கல்லூரி மைதானத்தில் நாளை 20ம திகதி திங்கட்கிழமை பகல் 12-00 மணி தொடக்கம் நடைபெறவிள்ளது.

## கண்டெடுக்கப்பட்டது

வேலுப்பிள்ளை நாகேஸ்வரி என்பவரது உலர் உணவுக் கூப்பன பத்திரம் (இல: 135788/34648, பண்டத்தரிப்பு விசேட கிளை) கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு'' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

0 0 0

நவரெத்தினம் ரவீந்திரன், மானிப்பாய் ரேட் யாழ்ப்பாணம் என்பவரது அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

# பூநகரி இராணுவத்தை முற்றுக நீக்கி போக்குவரத்துப் பாதையை திறந்து பொருளாதாரத்தடையை நீக்கவேண்டும்

(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் மாறி மாறி வந்த ஸ்ரீலங்கா அரசுகளினுல் நடைமுறைப்படுத்தப்பட்ட பன்முகப்பட்ட பேரினவாதக் கோட்பாட்டினுல், தமிழ் மக்கள் அடைந்த சொல்லலொண்ணு இடர்களும், துன்ப துயரங்களும் தாங்கள் அறிந்ததே.

போரினுல் விழைந்த சமூக, பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்ட ஸ்ரீலங்கா மக்கள் தங்கள் மேல் நம்பிக்கை கொண்டு பூரண ஆதரவை வழங்கி, தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அன்ருட வாழ்க்கைப் பிரச்சனைகளுக்கு நிவர்த்தி காணவும், சமாதான வழியிலான அரசியல் தீர்வு நோக்கிய அணுகுமுறைகளை இனங்கண்டு, அதன் மூலம் நீடித்த சமாதானத்தை அடைவதற்கான மக்களாணையை வழங்கினர்.

ஆனுல் துரதிஷ்டவசமாக தமிழ் மக்களைப் பொறுத்தவரை அன்ருடப் பிரச்சனைகளுக்கு நிவர்த்தியை முதலில் சண்டு நிரந்தர சமாதான அரசியல் தீர்வை எட்டுவதற்காக தமிழ்மக்களது இயல்பு வாழ்க்கையைத் தோற்றுவிப்பதில் ஆக்கபூர்வமாகத் தாங்கள் ஈடுபடாது தயக்கம்காட்டுவதையும், தொடர்ந்து இராணுவ அழுத்தத்தைப் பிரயோகிக்க முனைவதையும் உணர்கிறேம். தயக்கமடைவது தடைகளை ஏற்படுத்தும்.

தங்களது ஆட்சியில் தொடக்க காலத்தில் தாங்கள் தந்த வாக்குறுதிகள் எம்மை உற்சாகப்படுத்தின. நிரந்தர சமாதானம் ஏற்படப்போகிறது என நம்பினேம் வரவேற்றேம்.

(வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தினர், நேற்று யாழ். நகரில் நடத்திய பேரணியின் பின்னர் ஜனதிபதி சந்திரிகா குமாரணதுங்காவிற்கு அனுப்புவதற்காக யாழ். பதில் அரச அதிபரிடம் கையளித்த மகஜர்]

தொடரும் இராணுவ அழுத்தங்களும், பேச்சுவார்த்தையில் தாங்கள் காட்டும் அசிரத்தையும் இன்நம்பிம்கையைச் சிதறடித்துள்ளன. தமிழ் மக்கள் மீண்டும ஏமாறறப்படலாம் என அச்சமுற்று வேதனைப்படுகின்றேம்.

ஏனெனில் தமிழ் மக்களின் இனப் பிரச்னையைத் தீர்ப்பதற்குச் சிங்கள மக்களின் ஆணையைப் பெற்று வந்த அரசாகத் தாங்கள் இருப்பதாலும், சர்வ வல்லமை பொருந்திய ஜனதிபதியாகத் தாங்கள் இருப்பதாலும் சர்வதேச சமூகம் சமாதான முயற்சிகளுக்கான அங்கீகாரத்தை வழங்கி, ஒத்துழைப்புகள் உதவிசளை அளிக்க முன் வந்திருக்கும் இன்றைய நிலையிலும், தமிழீழத் தெசியத் தலைவர் தமிழ் மக்களது வாழ்வில் இயல்புநிலை தோன்றவும், நிரந்தர சமாதானத்திற்குமான நிபந்தனையற்ற தயார் நிலையில் இருக்கின்ற சூழ்நிலையிலும், விட்டுக்கொடுப்புகளையும், நல்லெண்ண வெளிப்பாடுகளைக் காட்டும் நிலையிலும் தங்கள் அரசு ஆக்கபூர்வமான வழிவகைகளைக் கைக்கொள்ளாது அசமந்தப்போக்குகளைக் கடைப்பிடிப்பதைக் கண்டு கவலையடைகிறேம்.

தவிழீழ விடுதலைப் புலிகள் சமாதானத்தை அடைவதற்கான அனைத்து நடைமுறைகளையும் தங்களுடன் ஆராய்ந்து பரிசீலிக்க முன்வந்து வரவேற்றுள்ள இவ்வேளையில், தமிழ்மக்களது, நியாயமான ஏகமனதான பின்வரும் கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கின்றேம்.

தமிழ்மக்களுடைய முழுமையான அபிலாசைகளை நிறைவேற்றக்கூடியதும், தமிழ் மக்களுடைய சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்கக்கூடியதுமான தீர்வு காண தங்களுடைய அரசு முன்வர வேண்டும் என வலியுறுத்துகிறேம்.

தற்போது நடைமுறையிலுள்ள பொருளாதாரத் தடையை முற்றுக நீக்குவதன் மூலம் மக்களது அன்ருட பாவனைப் பண்டங்கள் தட்டுப்பாடின்றி தாராளமாக நியாய விலையில் கிடைக்க ஏற்பாடுகள் செய்தல்வேண்டும்.

மக்கள் அச்சமின்றி சுதந்திரமாக போக்குவரத்தை மேற்கொள்வதற்காக முதற்கட்டமாக பூநகரிப் பிரதேசத்திலுள்ள இராணுவத்தை முற்றுக நீக்கி, சஙகுப்பிட்டி-கேரதீவுப் பாதையை திறந்துவிட வேண்டும்

இராணுவத்தினுல் கைக்கொள்ளப்பட்ட தமிழ் மக்களது பிரதேசங்களில் இருந்து ராணுவ முகாம்கள், சோதனை மற்றும் தடை முகாம்களை அகற்றி இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் மீளக் குடியேற நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தங்களால் முன்னெடுக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தின் விதிகளுக்கு அமைவாக, சட்டபூர்வமான தடைகளற்ற கடற்ருெழிலை மேற்கொள்வதற்கான அனைத்து கடல்வலய தடைச் சட்டங்களை நீக்குதல் வேண்டும்.

வடக்கு - கிழக்கில் உடனடியாக புனர்நிர்மாண அபிவிருத்தி வேலைகளை விரைவுபடுத்தி மேற்கொள்ளல்வேண்டும்.

மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையை மேலும் விரிவுபடுத்தி, நிரந்தர போர் நிறுத்தத்தை ஏற்படுத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட செயற்பாடுகள் மூலம் மக்களது வாழ்க்கையில் இயல்பு நிலையைத் தோற்றுவித்து, அவர்களது நம்பிக்கையைப் பெற்று, நீண்டகாலமாகப் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்னைக்கு நிரந்தரமான அரசியல்தீர்வு காணும் பொருட்டு தங்களது தலைமையிலான சிறிலங்கா அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் துரிதமாகப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டும்.

மேற்கூறிய நடைமுறைச் சாத்தியத்துடனுன கோரிக்கைகள் அனைத்தும் நிரந்தர சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த வல்லவை என நாம் உறுதியாக நம்புகிறேம்.

மக்களது நலம், நிம்மதியான, அமைதியான வாழ்க்கை ஆகியவற்றில் அக்கறை கொண்டுள்ள தங்களது கவனத்திற்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்குமாக எமது நம்பிக்கை எனும் உத்வேகத்துடன் இம்மகஜர் இன்னலுறும் தமிழ் மக்களது சார்பில் எம்மால் தங்களுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது - 162

# வங்கிகடன் ஊக்குவிப்பால் உற்பத்தி அதிகரிப்பு

(உடுவில்)

''கோழி வளர்ப்பு. கால்நடை வளர்ப்பு, விவசாயம் போன்ற அபிவிருத்திகளுக்கு இலங்கை வங்கி கடன் வழங்கி ஊக்குவித்தமையால், இன்று எமது பிரதேசத்தின் உற்பத்தி பெருகியுள்ளது. அதன் காரணமாகப் பால், முட்டை, வாழைப்பழம் ஆகியவற்றின் விலைகளும் கணிசமான அளவு குறைந்துள்ளது.''

வலிகாமம் பிரிவில் உள்ள மேட்டு நிலப் பயிர்ச் செய்கையாளருக்குக் கடனுதவி வழங்கிய இலங்கை வங்கியின் சுன்ஞகம் கிளை முகாமையாளர் எஸ். விக்னராசா இவ்வாறு கூறினர்.

கிராமியப் பொருண்மிய மேம்பாட்டுச் சுயதொழில் ஊக்குவிப்புக் கடன் திட்டத்தின் கீழ், வலிகாமம் பிரிவில் உள்ள 68 விவசாயிகளுக்கு இக்கடன் வழங்கப்பட்டது.

மருதனர்மடத்தில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி விவசாயப் பிரிவில் வைத்து ஒவ்வொரு விவசாயிகளுக்கும் 10 ஆயிரம் ரூபா கடன் வழங்கப்பட்டது. வலிகாமம் கோட்டப்பொறுப்பாளர் திரு. ஒப்பிலறிவன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

யாழ். மாவட்டப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனச் சிறப்பு ஆலோசகர் தியாகராசா, யாழ். மாவட்டப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் ஆதவன் ஆகியோரும் உரையாற்றினர் -109

## வாசு குழுவினர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துச்செல்லும் இக்குழுவினர் கிளாலி ஊடாகவே திரும்புவர்.

இக்குழுவினரை வவுனியாவில் வைத்து வரவேற்பதற்காக அப்பகுதியில் ஏற்பாடுகள் செய்யபபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

## நிரந்தரதீர்வு

1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேவர் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரனும் அரசாங்கமும் சமாதான நிலைப்பாட்டுக்குள் வந்து பிரச்களுக்கு தீர்வு காண்பதே சரியான முடிவைக் கொண்டு வரும் என்றும் இனப்பிரனைக்கு நிரந்தர தீர்வுகாணப்பட வேண்டுமென்பதில் அமெரிக்க அரசாங்கமும், மக்களும் பெரும் அக்கறையாக உள்ளார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். ரி-சி

## யுத்தத்தால்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தானக்குழுவினர் நடாத்திய பத்திரியாகையாளர் மாநாட்டில் உரையாற்றிய கொழும்பு பல்கலைக் கழக பேராசிரியர் ஜெயதேவ உயாங்கொட தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்,

நேற்றுக் காலை விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்தித்தோம். தற்போதைய நிலைகள் குறித்து புலிகளின் சார்பில் திரு, அன்ரன் பாலசிங்கம் எமக்கு விளக்கமளித்தார. கொழும்பிலே எமது சமாதானக் கோரிக்கை அடங்கிய மகஜரை அரசிடம் கையளித்தோம். அதேபோன்று நேற்றுக் காலை புலிகளைசந்தித்த போது எமது சமாதானச் செய்திகளை புலிகளிடம் கையளித்தோம்.

அதன்போது இனப்பிரச்னை தீர்வுக்கு புலிகளும் தமது தீர்வுத்திட்டத்தை தெரிவிக்க வேண்டுமெனவும், மோதல் தவிர்ப்பு உடன்பாட்டை புலிகள் நன்கு கடைப்பிடிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டோம். அதனை அவர்களும்நன்கு உறுதிப்படுத்தினர்கள். இதேபோன்ற கோரிக்கையை நாங்கள் இலங்கை அரசிடமும் முன்வைத்துள்ளோம். இந்த போர் நிறுத்த உடன்படிக்கையை அரசு மீறக்கூடாதெனவும் அல்லது அரசினுல் இந்த போர் நிறுத்த உடன்படிக்கை மீறப்படக்கூடா தனவும் வறபுறுத்தியுள்ளோம்.

இந்த சமாதான நடைமுறைகளை முன்னெடுத்துச் செலவதற்காக இந்த போர் நிறுத்த நடைமுறைகள் மிகவும் முக்கியமானவை என்பதை வலியுறுத்துகிறேம்.

இந்த சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டபோது தென்பகுதி மக்கள் ஏகமனதாக பேச்சுவார்த்தை மூலமாக ஒரு அரசியல் தீர்வை நோக்கி இந்த அரசாங்கம் செயற்பட வேண்டியதற்கான அவசியத்தை பூரணமாக வெளிப்படுத்தினர்கள். விமானக் குண்டு வீச்சுக்கள் நிறுத்தப்பட்டு பொருளாதாரத்தடை ஓரளவு நீக்கப்பட்டு பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்ட நிலைமையானது, இந்த பேச்சுவார்த்தை மூலமாக சமாதானத்தை அடைவதற்கான சாதக வழிமுறைகளாக நாங்கள் கருதினேம்

இத்தகைய நிலைமைகளினூடாகத்தான்எங்களைப்போன்றவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்து போகக்கூடிய சூழ்நிலை உருவாகியது எனக்கூற வேண்டும். தென்னிலங்கை சமாதான விரும்பிகளின் பிரதிநிதிகளாக நாங்கள் இங்கே வருவதற்கு எமக்கு அனுமதியளித்து ஆதரவளிதத விடுதலைப் புலிகளுக்கு நாம் நன்றி கூறவிரும்புகிறேம் என்ருர். -ஏ

# 45-ம்நாள் நினைவாஞ்சலி



திருமதி தெய்வானைப்பிள்ளை
சிதம்பரேஸ்வரம்பிள்ளை

பிறப்பு: 10 – 07 – 1906

சிவபதம்: 07 – 01 – 1995

முறையாலே சில பேர்க்கு ''நல்லாச்சி'' ஆனீர்
நும் திருக்குணத்தாலே பல பேர்க்கு நல்லாச்சி என வாழ்ந்தீர்
இறை பாதம் தொழுதேற்றும் உம் சித்தன்கேணி
மகாகணபதி குலதெய்வம்
மறையோதும் ஆலயங்கள், தமிழக
யாத்திரைத் தலங்கள் சென்று வந்தீர்
நிறைவோடு வாழ்ந்தவரே. உத்தமியே
நெஞ்சு பதைக்குது அம்மா! உம் பிரிவை எண்ணி

உங்கள் ஆத்மா சாந்திக்குப் பிரார்த்திக்கும்.

மகள், மருமகன், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், உற்ருர், உறவினர்.

''ஐயா வளவு''
வட்டுக்கோட்டை கிழக்கு,
சித்தன்கேணி. (ஏ-4789)

### மணிவாக்கு

பெண்கள் வெறும் கூண்டுக் கிளிகளாக இருக்கும மட்டும் வாழ்வு நிமிராது; நல்ல நிலை ஏற்படாது.

- பேரறிஞர் அண்ணு

# முன்னுள் ராணுவத்தளபதி சிசில் நாட்டைவிட்டு வெளியேறத் தடை

(கொழும்பு)

முன்னுள் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன நாட்டைவிட்டு வெளியேறுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நிதி மோசடி, ரெண்டர் மோசடி சம்பந்தமாக அரசினுல் மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்கு அவர் நாட்டில் இருப்பது அவசியம் என்றும், அவர் நாட்டை விட்டு வெளியேறுவதற்குத் தடை விதிக்கவேண்டும் எனப் பொலிஸ் குற்றப் பிரிவுப் புலனுய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் விடுத்த கோரிக்கையை அடுத்தே இந்தத் தடை உத்தரவு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. -இ

# அமெரிக்காவில் குடியேற விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(கொழும்பு)

அமெரிக்காவில் குடியேற விரும்பும் இலங்கையர்களிடம இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அமெரிக்கா இந்த வருடம் வெளிநாடுகளைச் சேர்ந்த 55 ஆயிரம் பேர் அங்கு குடியேறுவதற்கு, விசா வழங்க முடிவு செய்துள்ளது.

யாரைக் குடியேற்றுவது என்பது சீட்டு மூலம் தெரிவு செய்யப்படும். எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி வரை இதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. -இ

## நமது நோக்கு

### குடியேற்றம்

மீளக் குடியேற்றம், புனர் நிர்மாணம் முதலியன மக்களின் வேதனைகளைப் போக்கி இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் என்பதை எவரும் மறக்கமாட்டார்கள்.

ஆனுல் - மீளக்குடியேற்றம் என்ற போர்வையில் குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள இன விகிதாசாரத்தை மாற்ற எடுக்கும் எந்த முயற்சியும் கண்டிக்கப்பட வேண்டியதே!

மக்கள் விழிப்போடு இருந்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதோடு தடுத்து நிறுத்த வேண்டும்.

ஏனெனில் - இலங்கை இனப்பிரச்சினைக்கான அடிப்படைக் காரணங்களான மொழி, கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் கூடிய முக்கியத்துவம் பெறுவது குடியேற்றமே.

இந்த வகையில்தான் - வவுனியா செட்டிகுளத்தில் ஒரு குடியேற்ற முயற்சிக்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதையும் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததையும் இங்கு நாம் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

தெற்கிலே உள்ள வாசுதேவா போன்ற சில தலைவர்கள் இத்தகைய குடியேற்றங்கள் எரியும் நெருப்புக்கு எண்ணை வார்க்கும் செயல் என்பதை ஏற்கனவே உணர்ந்து கருத்துக்கள் வெளியிட்டு வந்ததையும் நினைவுபடுத்த விரும்புகிறோம்.

இன்று - மத்திய கிழக்கு நாடுகளிலே சமாதான முயற்சிகளும் ஒப்பந்தங்களும் சகடயோகம் போல முன்னேறுவதும், பின்னடைவுகள் ஏற்படுவதற்கான காரணங்களில் பிரதானமானது. இஸ்ரேலியக் குடியேற்றம் என்பதை உலக அரசியல் கணிப்பாளர்கள் உணர்ந்துள்ளார்கள்.

எனவே - இங்கும் குடியேற்றம் ஒரு தடை, தாமதங்கள் விளைவுக்கும் காரணியாக மாறக்கூடாது என்பதைச் சர்வதேசம் எளிதாக உணர்ந்துகொள்ளும் விதத்தில் இவைபற்றிய செய்திகள் முக்கியத்துவம் பெற வேண்டும்.

அரசுக்குத் தெரியாமலே, சில இடைமட்ட அதிகாரிகள் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் குழப்ப முயற்சிக்கிறர்களா என்பதுபற்றியும் அரசு விழிப்புடனிருந்து செயற்பட வேண்டும் என்பதை வலிறுத்த விரும்புகிறேம்!

## பலதும் பத்தும்

### சித்த மருத்துவம்

ஆய கலைகள் 64ல் சித்த மருத்துவம் 14வது கலை. பதது வாயுக்கள், பத்து நாடிகள், ஏழு தாதுக்கள் ஆகியவற்றை அடிப்படையாக வைத்து எழுந்தது.

காப்பு, நீக்கு, நிரப்பு என மூன்று பிரிவுகள் உள்ளன. நோய் வராது காத்து, உடல் நலம் பேணுவது காப்பு. சூழலாலும், எமது கவனக் குறைவாலும் ஏற்பட்ட நோய்களை நீக்க வழிமுறைகள் காணப்பட்டுள்ளன. 4480 நோய் வகைகளை நாடி பார்த்து அறியலாம் என்கிறர் திருமூலர். மருந்து அளிப்பது 'நீக்கு'.

நிரப்பு ...? மயக்கும் நிறங்களில் ... உமிழ் நீரை மாத்திரம் சுரக்க வைக்கும் ... கண்டனவற்றையெல்லாம் ... கண்ட கண்ட நேரங்களில் வாயில்போட்டு நிரப்புவதல்ல! தினசரி உணவிற் கிடைக்காத, நோயினுற் குறைந்துவிட்ட சத்துக்களைக் கொடுத்து நிரப்புவதுதான் 'நிரப்பு'!

— மயூரன்

## இராசி பலன்

19-02-1995

ஞாயிற்றுக்கிழமை

(தமிழுக்கு [மாசி -07)

சதுர்த்தி பிற்பகல் 2.37 வரை; அத்தம் பிற்பகல் 12-39 வரை அமிர்தசித்த யோகம் இராகு காலம் மாலை 5.02 முதல் 6-32 வரை சுப வேளை காலை 9-02 முதல் 10-32.

மேஷம்: குடும்பவேறு, அதிக உழைப்பு. மனநிறைவு.

இடபம்: முட்டி மோதுதல், தவறிழைத்தல், வெறுப்பு.

மிதுனம்: சகோதர வாஞ்சை தீவிரயோசனை, அலைச்சல்.

கடகம், தொழில் சிறப்பு, வெளியூர்தகவல் பணவரவு.

சிங்கம்: அமைதியின்மை. பலக்குறைவு, புத்திரர்செலவு.

கன்னி; அறிஞர் சந்திப்பு, விருந்துன்ணல். சாதனை.

துலாம்: ஏமாற்றப்படல், கௌரவப்பிரச்சனை, காரிய தடை.

விருச்சிகம்! விவேகமான முடிவு. பெற்ருேர் ஆசி, துணிவு.

தனுசு: முயற்சி பலிதம், குடும்பபிரச்னை, அகாலஉணவு

மகரம்; உறவினர் சங்கடம், மனவேதனை, வீண்கவலை,

கும்பம்: தொழில் எதிர்ப்பு, விரோதித்தல், தேவையற்ற முயற்சி-

மீனம்: சுபகாரியம், குறுகிய நோக்கம், தானதர்மம்.

— ஜோஸ்யர்

### அகதிகள் வருகை குறைவு

(பேர்ண்)

சுவிஸில் கடந்த ஆண்டு வெளிநாட்டு அகதிகளின் வருகை வெகுவாக குறைந்திருக்கிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

1994ல் 19 ஆயிரத்து 134 பேர் அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பித்திருந்தனர். இவர்களிய் 1487 பேர் மட்டுமே இலங்கைத் தமிழர்கள் என புள்ளிவிபரம் ஒன்று தெரிவிக்கின்றது. [ரி]

## இன்று

(யாழ்ப்பாணம்)

தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் வாராந்த ஆய்வரங்கும், பயிலரங்கும் இன்றுமாலை மூன்று மணிக்கு ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இன்றைய ஆய்வரங்கில், பெண்கள் ஜாதகம் பற்றி ஐயா சச்சிதானந்தனும், சோதிட சிந்தனைகள் பற்றி எஸ். பத்மநாதனும் ஆய்வுரை வழங்குவார்கள், பயிலரங்கை கே. சாம்பசிவமும், பி. இரத்தின சேகரமும் நடாத்துவார்கள். -எஸ்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச் சங்க அதிபர்கள், சங்க உறுப்பினர்கள் கருத்தரங்கும் வருடாந்தப் பொதுக்கூட்டமும் இன்று 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-45 மணிக்கு சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் சங்கத்தலைவர் திரு. கோ. சி. வேலாயுதம் தலைமையில் நடைபெறும். (75)

0 0 0

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பிரதேச இளைஞர் வள நிலைய இரண்டாம் ஆண்டு விழா இன்று 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1-00 மணிக்கு மல்லாகம் நிலைய வளாகத்தில் நடைபெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து சமயப்பேரவையின் 'இந்து தர்மம்'-மலர்-5' வெளியீட்டு விழா புலோலி அருள்மிகு பசுபதீஸ்வரர் ஆலயத்தில் இன்று 19ம் திகதி ஞாயிறு காலை 9-00 மணிக்கு ஆத்மஜோதி திரு. நா. முத்தையா தலைமையில் நடைபெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக புறநிலைப்படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் கடந்த 6 மாதமாக இடம்பெற்றுவந்த மக்கள் வங்கிப் பணியாளர்களுக்கான விசேட ஆங்கிலக் கற்கைநெறியின் நிறைவுநாள் வைபவம் இன்று 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் இடம்பெறுமென இணைப்பாளர் தெரிவிக்கின்ருர்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை ஆதரவில் புண்ணியநாச்சியம்மையார் தினம் இன்று 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சைவபரிபாலன சபைத் தலைவர் திரு. இ. மகேந்திரன் தலைமையில் நடைபெறும்.

# வடபகுதிக்குள் உருளைக்கிழங்கு கொண்டுவர தடை!

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்குள் உருளைக்கிழங்கு கொண்டு வரப்படுவது உற்பத்தியாளர்களின் நலன் கருதித் தடை செய்யப்பட்டுள்ளதாக, தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் தற்போது உருளைக்கிழங்கு அறுவடை ஆரம்பமாகியுள்ளது ஒவ்வொரு விவசாயியும் ஏனைய பயிர்களை விடக் கூடியளவு முதலீட்டைப் போட்டுள்ள உருளைக்கிழங்கு உற்பத்தியில் 160 கெக்டயர் நிலப் பரப்பில் 2,200 மெற்றிக் தொன் விளைச்சல் எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது உருளைக்கிழங்கின் விலை 20 ரூபா வரை வீழ்ச்சி அடைந்திருப்பதால், உற்பத்தியாளர் நலன் கருதி இத்தடை கொண்டுவரப்பட்டுள்ளதாகவும், தனியார் வர்த்தகர்களின் ஒத்துழைப்பு எதிர்பார்க்கப்படுவதாகவும் அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது -ரி

வட—கிழக்கில்

# ஆசிரியர் பற்றுக்குறையை நீக்க கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் நிலவும் ஆசிரியர் பற்றுக்குறையை நீக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் உயர் கல்வி அமைச்சர் றிச்சட்பத்திரனவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடந்த 13ம் திகதி கொழும்பில் இருசாராருக்கும் இடையில் இடம்பெற்ற மேற்படி சந்திப்பில் மேற்கண்டவாறு வற்புறுத்தப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர்களின் பதவி உயர்வுகள் இனவிகிதாசார அடிப்படையில நடைபெறவேண்டும். ஆனுல் அவ்வாறு வழங்கப்படுவதில்லையெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது,

இதுகுறித்து உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அமைச்சர் தரப்பில் உறுதிமொழி வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. க-சி

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-02-19

ஞாயிறு இரவு

08.01 இசையரங்கம்- நிகழ்ச்சியில் என். ஆர். கே. இரத்தினகுமார், என். ஆர். கே. வாகீசன் ஆகியோரின் நாதஸ்வரக் கச்சேரி.

08.30 செய்திகள்

08.40 தாயகப்பாடல்கள் என்பன இடம்பெறும்.

1995-02-20

திங்கள் காலை

07.02 மாவீரவணக்கம்

07.15 நீங்கள் கேட்டவை

07.30 செய்திகள்

07.35 பத்திரிகைச் செய்திகள்

07.40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி என்பன இடம்பெறும்.

### தமிழீழ வானெலி நிகழ்ச்சி நிரல்

1995-02-19

ஞாயறு மாலை

05.01 சிந்தனைச் சிதறல்

05.02 எழுச்சிகீதம்

05.10 புதியவை

05.15 மழலைகளுக்காக

05.30 கதம்பம்

06-00 சிந்தனைக்குச் சிலவினுடிகள்

06:02 பாமாலை

06.15 என் தெரிவு

06.30 மணிக்கு மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

### மருந்தகங்கள் திறக்கப்படும்

(வேலணை)

வடமராட்சி கிழக்கு, நெடுந்தீவு ஆகிய இரு இடங்களிலும், சித்த ஆயுள்வேத மத்திய மருந்ததங்கள் விரைவில் திறக்கப்படவுள்ளன.

இதற்கென அனுமதியை வடக்கு-கிழக்கு மாகாண மகளிர் விவகார, அமைச்சுக்கு அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. -75

## ஈழநாதம் 6வது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

'ஈழநாதம்' பத்திரிகையின 6வது ஆண்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4-00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'ஈழநாதம்' பிரதம ஆசிரியர் திரு. பொ. ஜெயராஜ் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், பிரதம விருந்தினராக தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் கலந்துகொள்வார் சிறப்பு விருந்தினராக தமிழீழ மகளிர் படையணித் தளபதி செல்வி விதுஷா கலந்துகொள்வார். யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு இளம்பரிதி மங்களவிளக்கு ஏற்றி வைப்பார்.

கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை. இரத்தினதுரை, வண.பிரான்சின் யோசேப் அடிகளார், திரு. அ. குமாரவேல் ஆகியோர் சிறப்புரை ஆற்றுவார்கள்.

சுத்தமான காற்றை சுவாசிக்க சூழலெல்லாம் மரம் நடுவோம்

## லட்சம் மக்கள்

(1ம் டக்கத் தொடர்ச்சி)

கோவில் வீதியிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பணிமனையைச் சென்றடைந்தது. அங்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்ட வதிவிடப் பிரதிநிதி திரு. மார்ட்டினிடம் வெகுஜன அமைப்புக்கள் ஒன்றியத்தின் தலைவர் திரு. சூ. சிறில் கண்டன மகஜர் ஒன்றைக் கையளித்தார்.

இதனைத் தொடர்ந்து இப்பேரணி கோவில் வீதி வழியாக யாழ். மாவட்டச் செயலகத்தை நோக்கிச் சென்றது. பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் பொது அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்ட இப்பேரணியில் பல வகையான கண்டனச் சுலோகங்கள் எழுதப்பட்ட பதாகைகள் பேரணியினரால் எடுத்துச் செல்லப்பட்டது அத்தோடு முழங்குங் கடல் எங்கள் வளம் முடக்க நினைப்பது உங்கள் செயல், இந்தக் கடல் எங்கள் கடல் இதைத் தடுக்க நீ யார். பட்டினி போட்டுக் கொல்லாதே, பல தடைபோட்டு நில்லாதே, அம்மையார் அள்ளி வழங்கிய வாக்குகள் அரை குறையன்றி முழுமையே இல்லை, சொல்லையும் செயலையும் ஒன்றுக்கு. துணிந்துமே தீர்வினை முடிவாக்கு, நேசக்கரத்தை நீட்டிய தலைவன் பாதையில் செல்பவர் நாமென அறிவாய், சொந்த மண்ணில் சுதரந்திரமாகச் சென்றுமே வந்திட வழிவகை செய்வாய் உட்பட பல கோஷங்கள் பேரணியில் சென்றவர்களால் எழுப்பட்டது.

கோவில் வீதி வழியாகச் சென்ற பேரணி தொடர்ந்து ஆஸபத்திரி வீதி, கண்டி வீதி வழியாக யாழ். மாவட்டச் செயலகத்தைச் சென்றடைந்தது. இங்கு வைத்து யாழ். மாவட்டப் பதில் அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போலிடம் பேரணியில் வந்தவர்களால் சிறி லங்கா ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. இதே நேரம் கொழும்பிலிருந்து சமாதான யாத்திரை ஒன்றை மேற்கொண்டு யாழ். நகர் வந்துள்ள சமாதானக் குழுத் தலைவர் திரு. வாசுதேவநாணயக்காரவிடமும் வெகுசன அமைம்புக்கள் ஒன்றியத்தின் தலைவர் திரு. சூ. சிறில் மகஜர் ஒன்று கையளித்தார்.

இக்கண்டனப் பேரணியில் உள்ளூர், வெளியூர், வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள், படப்பிடிப்பாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். பேரணியைத் தொடர்ந்து செயலக் முன்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது. இக் கண்டனக் கூட்டத்தில் இந்து மதக் குருபீடாதிபதி, சிவசிறி சாம்பசிவ சிவாச்சாரியார், மனித முன்னேற்ற நடுநிலையத் தலைவர் வண கலாநிதி ஜெபநேசன் அடிகள், பெண்கள் ஆய்வுநிறுவனத்தை சேர்ந்த திருமதிதிலகவதிறங்கசாமி உட்பட வெகுசன அமைப்புக்களைச் சேர்ந்த பல பிரதிநிதிகள் உரையாற்றினார்கள். இதனைத் தொடர்ந்து திரு. வாசுதேவநாணயக்கார உரையாற்றினார். இதையடுத்து அந்த சமாதானக் குழுவில் வந்த பாடகர் திரு.ஜெயதிலக பண்டார தமிழிலும் சிங்களத்திலும் இரு பாடல்களைப் பாடினார்.

தென்னிலங்கையி லிருந்து வருகை தந்திருந்த சமாதானக் குழுவினரால் 1994ம் ஆண்டு டிசம்பர் மாதம் 9ம் திகதி இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் கையளிக்கப்பட்ட மக்கள் சமாதான மகஜரும் பேரணியில் வைத்து பொது மக்களுக்கு வினியோகிக்கப் பட்டதும் குறிப்பிடத்தக்கது. 162-சி

## தமிழ் மக்களின்

(4ம் பக்கம் பார்க்க)

கள் மீன் பிடிப்பதற்கான உரிமை, இலகுவாக போக்குவரத்து செய்வதற்கான ஒரு பாதுகாப்பான வழி, பொருளாதாரத்தடை முற்றாக நீக்கப்பட்டு மக்களுடைய அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருட்கள் இலகுவாக கிடைக்கக்கூடிய வழி ஏற்படல் போன்ற உங்களது கோரிக்கைகளை நாம் ஏற்றுக்கொள்கிறோம் இந்த மாதிரியான கோரிக்கைகளை நிறைவேற்றாமல் சமாதானத்திற்கான பேச்சுவார்த்தைகள் நடத்தப் படமுடியாது என்பதையும் நாம் ஆணித்தரமாக நம்புகிறோம்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்: நாங்கள் தென்னிலங்கையிலிருந்து அப்பகுதி மக்களின் சமாதானத் தூதுவர்களாக அவர்களது சமாதானச் செய்திகளை பெற்றுக்கொண்டு வடபகுதிமக்களான உங்களைச் சந்திக்க வந்துள்ளோம்.

நாங்கள் இங்கே வந்த இந்த நேரமானது நீங்கள் ஆயிரக்கணக்கில் ஒன்றுகூடி உங்களது பிரச்னைகள் என்ன? உங்களது துன்பங்கள் என்ன? என்பதை எங்களுக்கு கூறுவதற்காக இங்கே வந்துள்ளீர்கள்.

நாங்கள் நேற்றுமுன்தினம் இங்கு வந்தபோது அந்தப் பயணத்தில் ஏற்பட்ட கஷ்டங்கள் மூலமாகவும் இங்கு வந்து நடத்திய பேச்சுக்கள் மூலமாகவும் இந்த மக்களின் பிரச்னைகளை நன்றாக உணர்ந்துள்ளோம். ஆகவே இந்த மக்களது பிரச்னைகளில் முக்கியமானது, இந்த மக்களது அன்றாடப் பிரச்னைகளை நீக்குவதுதான் என்ற செய்தியை நாங்கள் கொழும்புக்கு எடுத்துச் செல்கிறோம்.

இங்கே வந்துள்ள எமதுகுழு சமாதானத்திற்கான கொடியை ஏந்திக்கொண்டு தென்னிலங்கை மக்கள் மத்தியில் பல நெருக்கடிக்கு மத்தியில் தமிழ் மக்களதும் முஸ்லிம் மக்களதும் ஒருமைக்காக செயற்பட்டு வருகின்றகுழு. இன்று இங்கே வந்து விடுதலைப் புலிகளின் தலைவர்களையும் சந்தித்து உங்களையும் சந்திப்பதில் சந்தோஷமடைகிறோம். இதன் மூலம் உங்களது பிரச்னைகள என்ன என்பதையும் அறிந்தோம். இந்தச் செய்தியை நாம் தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்கிறோம்

இங்கேவந்துள்ள தூதுக்குழுவினர் மக்கள் மத்தியிலே மிகவும் தீவிரமாக செயற்பட்டவர்கள். இதன்மூலம் எமது தலைவர் விஜய குமாரதுங்க போன்றவர்கள் தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்ததன் காரணமாக பேரினவாதிகளால் கொல்லப்பட்டார். அதுபோல தென்னிலங்கையில் எமது சில நூறு தோழர்களும் தமிழர்களது பிரச்னைகளையும், தமிழர்களது உரிமைகளையும் முன்னெடுத்துச் செல்வதற்காக போராடியதால் தென்னிலங்கை பயங்கரவாதிகளால் கொல்லப்பட்டார்கள். இந்த அடிப்படையிலேயே தமிழ் மக்களுடைய தேசிய உரிமைகளை முன்னெடுத்துச் செல்வதிலே நாங்கள் தொடர்தும் செயற்படுவோம். தென்னிலங்கையிலே உங்களது பிரச்னைகள் பற்றி தொடர்ந்தும் கூறுவோம் என்பதை இங்கு வலியுறுத்த விரும்புகிறேன்.

விஜயகுமாரதுங்க போன்றவர்கள் இந்த காரணத்தால் கொல்லப்பட்டமை வீண் போகவில்லை என்றுதான் கருதவேண்டும். அவர்கள் கொல்லப்பட்டாலும் கூட அந்தக் காலத்தில் அங்கே

# "போரை முறியடிக்கும் வகையில் வலுப்பெற்று வருகிறோம்"

– வாசுதேவா தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

சிறிலங்கா அரசானது யுத் நோக்கி செல்லக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுமாக இருந்தால் அதனை முறியடிக்கும் வகையில் தாம் வலுப்பெற்று வருவதாக யாழ் வந்த சமாதானக் குழுவின் தலைவர் திரு. வாசுதேவ நாணக்காரா தெரிவித்துள்ளார்.

நேற்றுமாலை 4.30 மணிககு வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகளையும். மதகுருமாரையும், சிறிலங்காவின் சமாதானக்குழுவினர் சந்தித்தபோதே அவர் இவ்வாறு கூறினர்.

அவர் மேலும் அங்கு கூறியதாவது:

சமாதானமுயற்சிகளுக்குஎதிராக செயல்படுவோருக்கு எதிராக இன்று நாங்கள் செயற்

ஜனநாயக சூழ்நிலைகள் இருக்கவில்லை ஜனநாயக ரீதியான எமது கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கவில்லை இருநதாலும் இத்தகைய இன்னல்களுக்கு மத்தியில் நாங்கள் அங்கு ஜனநாயகத்துக்காக போராடிய அதேவேளையில் இந்த சிறுபான்மை இனங்களின் தேசிய உரிமைகளும். ஜனநாயக உரிமைகளும்வழங்கப்பட வேண்டுமென்று போராடி வந்துள்ளோம்.

நாங்கள் இந்த சமாதானக் குழுவில், தென்னிலங்கை மக்கள் சமாதானத்திற்காக முன்னெடுத்த கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு இங்கே வந்துள்ளோம். உறுதியான சமாதானத்தை முன்னெடுப்பதற்காக அரசு என்னென்ன கடமைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கைகளை அரசுக்கு முன்வைக்கவுள்ளோம் அதேபோல விடுதலைப்புலிகள் எந்தெந்த வகையில் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும். சமாதானத்திற்கான கடமைப்பாடுகளை எப்படி நெறிப்படுத்த வேண்டும், என்று ஒரு சில கோரிக்கைகளை விடுதலைப்புலிகளுக்கும் நாம் முன்வைத்துள்ளோம். இந்த அடிப்படையிலே சமாதானத்திற்கான பங்களிப்பை தீவிரப்படுத்துவதே எமது நோக்கமாக உள்ளது.

விஜேபோன்றவர்களின் உயிர்த்தியாகங்களூடாக நாங்கள் பேரின்வாதமாக இருந்த தென்னிலங்கை மக்களின் மனநிலையை மாற்றி இந்த நாட்டின் தேசிய சிறுபான்மை மக்களினது தேசிய உரிமைகளை ஏற்றுக்கொள்ளுமளவிற்கு நாங்கள் அவர்களது மனநிலையை மாற்றியுள்ளோம் அந்த மன நிலை மாற்றத்தின் ஒரு வடிவுதான் கடந்த பொதுத்தேர்தலில்யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தீர்வை காணவேண்டும் என்ற ஒரு ஆணையை இந்த நாட்டை ஆளும் அரசாங்கத்திற்குஅந்த மக்கள் வழங்கியுள்ளனர்

இந்த சமாதானப் பயணத்திலே மக்களின் உடனடிப பிரச்னைகளுக்கு தீர்வுகண்டு அதன் மூலமாக நிரந்தர சமாதானத்திற்கான தீர்வு காண வேண்டும், அந்ததீர்வு காணும் நடைமுறையிலே இந்த மக்களதுசுயாட்சிக்கான உரிமை அங்கிகரிக்கப்பட்டு தேசிய சிறுபான்மை மக்கள் தங்களது சுயதேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையிலே சுயாட்சிக்கான உரிமை அங்கீகரிக்கப்பட்டு அவர்களிடம் அரசியல் அதிகாரம் கையளிக்கப்பட்டு உறுதியான சமத்துவத்தையுடைய அரசியல் தீர்வு காணப்படவேண்டும் எனவும் கூறியதுடன் யுத்தம் வேண்டாம் யுத்தம் வேண்டாம் வேண்டாம் வேண்டாம் யுத்தம்வேண்டாம்எனத் தமிழிலும் கோஷமிட்டு தமது ரையை முடித்தார். -சி

படுகிறோம்.

இந்தவினாடி வரை கூட புதிய அரசு தனது வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. ஆனல் புதிய அரசை வெற்றியடைய வைத்த மக்களின் எதிர்பார்ப்புகள் நிறையஇருக்கின்றன.

புதிய அரசுக்கு கிடைத்துள்ள ஆணையின்படி சிறிலங்கா அரசு பொருளாதாரத் தடையை நீக்கவேண்டும். அதன் அடிப்படையில் சிறி

## அடுத்தவாரம்

(1-ம பக்கத் தொடர்ச்சி)

பகுதியினருக்கும் இடையே தோன்றியுள்ள சிக்கல் நிலைக்கு தீர்வு காணப்பட்டு வருகிறது. பூநகரி—சங்குபிட்டிபாதையும் ஆனையிறவு பாதையும் ஏக காலத்தில் போக்குவரத்திற்காக திறக்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

திரு. சந்திரானந்த டி சில்வா பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக பதவியேற்ற பின்னர் பாதுகாப்பு அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலே திரு. டல பத்தபென்டி மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார். -ரி-சி

## தமிழ்மக்களின் கோரிக்கை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தென்னிலங்கை மக்களிடமும் கூறுவோம்.

எமது சமாதானக்குழு இந்த மக்களின் பிரச்னைகளை நேரடியாக பார்த்தும், கலத்துரையாடல்கள் மூலமும் நன்கு உணர்ந்துள்ளது. சமாதானத்திற்கு எதிரான சக்திகள் இருக்கின்ற ஒரு நிலையில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து உறுதியான செயற்பாட்டின் மூலம்தான் நிரந்தரமான சமாதானத்தை வென்றெடுக்க முடியுமெனக் கருதுகிறோம்,

நாங்கள் வடபகுதி மக்களுக்கு ஒரு தெளிவான வேண்டுகோளை விடுக்கின்றோம். என்னவெனில் தென்னிலங்கையிலுள்ள சமாதான விரும்பிகளுடன் ஒன்றிணைந்து இந்த சமாதான நடைமுறைகளுக்கு ஆதரவு தாருங்கள் இதன் மூலமாக ஜனநாயத்தை நிலைநாட்டி ஜனநாயகத்துடனை ஒரு சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக செயல்பட முடியும். நாங்கள் இங்கே ஜனநாயகத்துடனை சமாதானம் என்ற அமைப்பை பிரதிநிதித்துவப்படுத்துகின்றோம் என்றார்.

இங்கு உரையாற்றிய திரு. வாசுதேவநாணயக்கார கூறுகையில்: சமாதானம் என்பது சமாதான வெண்புறுவான த்தை நோக்கி பறப்பது போன்றதொரு இலகுவான விடயமல்ல. அது மக்களை ஒன்றிணைந்து ஒரு நீண்டநாள் செயற்பாடு மூலம் வென்றெடுக்கப்பட வேண்டியதொன்று. சிங்கள மக்கள் மத்தியிலே சமாதானம் சம்பந்கமாக தமிழ்மக்களின்நிலைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டதொரு புரிந்துணர்வை ஏற்படுத்துவது எமது கடமையாகுமெனக் கருதுகிறேன். அதே போன்று முஸ்லிம் மக்களின் நிலைப்பாட்டிலிருந்து சிங்கள மக்கள் மத்தியில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக செயற்படவேண்டியது எமது கடமையெனக் கருதுகிறேன்.

ஆகவே இத்தகையதொரு நிலைப்பாட்டை அடையவேண்டுமானல் நாங்கள் மக்களுடன் மக்கள் தொடர்பு பட்டு ஒரு பரந்த அளவில் மக்களை ஒன்றிணைந்து செயற்படக் கூடிய செயல்த் திட்டம் மூலமாகத்தான் இதனை அடையலாமெனக் கருதுகிறேன் என்றார். சி

லங்காவில் கிடைக்கும் பொருட்கள் வடபகுதியில் அதே விலைக்கு கிடைக்கச் செய்ய வேண்டும்.

பூநகரி பாதை திறக்கப்பட்டு யாழ். குடாவிற்கான போக்குவரத்து சுமுகமாக்கப்பட வேண்டும். மீனவர்களின் உழைப்பை உறுதி செயயும் வகையில் அவர்களுக்கு உரிய பாதுகாப்பு வசதிகளை வழங்க ஏதுவான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

சிறிலங்கா இராணுவம் தமிழ் மக்கள் பிரதேசங்களில் குவிக்கப்பட வேண்டிய அவசியமே இல்லை.

தற்போது பதவியேற்றுள்ள புதிய அரசாங்கம் ஐ.தே.க. வின் அரசியல் கட்டமைப்பிலே தான் செயற்பட்டுவருகிறது என்றும் அவர் தெரிவித்தார். ரி

## கொழும்பு செல்லும் நோயாளர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

விசேட வைத்திய சிகிச்சை பெறுவதற்காக கொழும்பு செல்வதற்கு, வைத்திய நிபுணர்களால் சிபாரிசு செய்யப்பட்ட நோயாளிகள், கப்பல் பயணத்திற்கு பதிவுசெய்வதற்கான அடையாள அட்டை மற்றும் ஆவணங்களுடன் தனதுபணிமனையில் நாளை 20ம் திகதி திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு சமுகமளிக்க மாறு யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் கேட்டுக்கொள்கிறார்.

## அடுத்தமாதம்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானிக்கபபடும்.

புலிகளும் நாங்களும் சமாதான முயற்சிகளுக்காக கைகோர்த்து வருகிறோம்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவிக்கு சிவில் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளாரே. இவருக்கு யுத்தம் பற்றி அனுபவம் இல்லையே. இவர் இந்த பதவியை வகிக்க தகுதியுள்ளவரா? என்று நிருபர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் ரத்வத்த "இந்தியாவில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக சிவில் உத்தியோகத்தர் ஒருவரே பதவி வகிக்கிறார். யுத்தம் பற்றிய வேலைகளை முப்படையினரும் கவனித்துக்கொள்வார்கள். இது பாதுகாப்பு அமைச்சு செயலாளரின் கடமையல்ல எனத் தெரிவித்தார். ரி-சி

## புலிகள் - வாசு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூறிய புலிகள், சமாதானப் பேச்சுக்கள் தற்போது அரசின் நிலைப்பாட்டாலேயே முட்டுக்கட்டுக்கட்டை நிலையை அடைந்துள்ளதையும் சுட்டிக் காட்டினர்.

அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்கள் நல்ல சூழ்நிலையில் தொடரவேணடியது குறித்து சமாதானக் குழுவினர் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

விடுதலைப்புலிகள் தரப்பில் அரசியல் ஆலோசகர் திரு அரன்ரன் பாலசிங்கம், அரசியல் துறைபொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன், காவல் துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன், கல்விக்கழகப் பொறுபபாளர் திரு. இளங்குமரன், யாழ். மாவட்ட அரசியல்துறை பொறுப்பா திரு. இளம்பரிதி, விடுதலைப்புலிகள் உறுப்பினர் திரு. பாலகுமாரன் ஆகியோர் கலந்துகொண்டனர். -சி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/8-